முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1472

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.10.2023, செவ்வாய்கிழமை

1. பார்காக்க வந்த குருராஜனே
பரமானந்தம் தரும் ஞானதேசிகனே
சீர்திருத்தம் செய்து இந்த பேருலகை
சித்திமிகு ஞானலோகமாக மாற்ற
2. மாற்ற என் அவதாரம் எடுத்த
மாதவசியே ஆறுமுக அரங்கனே
ஆற்றல்தந்து உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 23ம் நாள், 10.10.2023, செவ்வாய்கிழமை)
3. ஆசியதும் அரங்கனுக்கு சக்தி கூட்டி
அற்புதத்தை ஆறுமுகன் யான் நடத்துவேன்
வாசிவென்ற தலைவர் படைகள்
வலம்வந்து அரங்கன் உன் சபையை
4. சபையை அலங்கரித்து வழிநடத்த
சற்குரு உன் சொல் செயல் அத்தனையும்
வேதமாக உலகுக்கு ஆற்றலாக
விரைந்து சென்று உலகமக்களிடை
5. மாற்றத்தை இனிதே நடத்தக்கூடும் மாதர்மம் உலகையே காக்கும்
மகான் உன் சன்மார்க்கமே உலகுக்கு நீதி ஆகும்
ஆகவே அரங்கன் நீ தருகின்ற அருளமுது உண்டு உலகோர்
அருள்தீட்சை பெற்று உன்வழி
6. வரமாக சன்மார்க்கம் ஏற்றால்
வையகம் உடன் மாற்றம் பெறும்
மாற்றத்தை ஆறுமுகன் யான் மகான் உன் வழி
இனிதே நடத்தத் துவங்கிவிட்டேன்

7. ஆற்றல் பட உலகோர் ஞானவான்களாக
அநீதிகளை வென்று அரக்கர் குலம் அழிந்து
மாற்றங்கள் அரங்கன் தர்மவான்களால்
மாதவசிகளால் உலகமெங்கும் சடுதி காணும்

8. காணுகின்ற மாற்றத்தை அரங்கன் வழி
கருணைகொண்டு பூட்டுத்திறவு நாட்கள் முதல்
மாற்றமாக ஆறுமுகன் யான் நடத்துவேன்
மக்களுக்கு நன்மை புரிவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–